**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 (இ) (ii), (ஈ) (i), (ii) பந்திகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஏனைய பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குருணாகல் மாவட்ட அலுவலகத்தால் இயந்திரம் வாடகைக்கு வழங்கியதால் பெறப்பட்ட ரூபா 415,565 தொகை ஏனைய பெறுவவாக மீளாய்வாண்டின் கணக்கில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் பொது வைப்புக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. | இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த ரூபா 415,565 தொகை 2022 மே 19 ஆந் திகதி அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்களின் வாடகை பொது வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு ஏனைய பெறுவனவாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019, 2020 மற்றும் 2021 என்ற 03 ஆண்டு காலத்தின் போது ரூபா 82,972,483 செலவில் தலைமை அலுவலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்றுமாடிக் கட்டிடத்தின் செலவினம் 281-2-2-01-2001 என்ற கட்டிட புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவின விடயத்தின் கீழ் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினம் பிழையாக வகைப்படுத்தப்பட்டு 281-2-2-1-2101 என்ற மூலதன சொத்துக்களை கைப்பற்றும் | ஏனைய செலவின விடயமொன்றின் செலவினம் மூலதன செலவினங்கள் கைப்பற்றும் செலவின விடயத்தில் உள்ளடக்குவதற்கு CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உள்ளடக்க முடியாதிருந்தமையால் அது சட்டரீதியான தேவையின் அடிப்படையில் இந்த செலவினம் ஆண்டில் | மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல் உரிய செலவின விடயத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவின விடயத்தின் கீழ் நிதியல்லாத சொத்துக் கூற்றின் ஆரம்ப மீதியில் சேர்க்கப்பட்டிருந்தது. | 281-2-2-01-2001 இன் கீழ் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

**(இ) அரசாங்கத்தி உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 346,356,990 ஆக இருந்ததுடன் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மீதி ரூபா 344,290,865 ஆனமையால் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்கும் இடையே ரூபா 2,066,125 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய திணைக்களத்தில் உள்ளக இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,991,743 ஆகும். இந்த கடன் மீதி 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடன் மீதியாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டின் போதும் உரிய மீதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்குள்ள கடன் மீதி அல்லாதிருந்தமையால் சரியாக கணக்குகளில் சீராக்கப்படாதிருந்ததுடன் இந்த மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு குறைபாடுகள் சரிசெய்யப்படல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டில் அனுராதபுரம் கலங்குட்டி (புள்நேவ) கமநல சேவை நிலைய கட்டிடம் | நிதியல்லா சொத்துக் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற்கு சொந்தமான கலங்குட்டி கமநல சேவை |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் செலவில் ரூபா 9,200,516 செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அது கட்டிடம் மற்றும் நிர்மாணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | நிலையத்தின் கட்டிடம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது தலைமை அலுவலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,904,713 பெறுமதியான 1000 நீர் நிலை அளவீடுகள், வரைபட ஸ்கேனர் இயந்திரம், 04 கணனி மொனிட்டர்கள், கணனி மென்பொருள் முறைமை, மிகிந்தலை சுற்றுலா விடுதிக்கான பாதுகாப்பு கெமரா முறைமை மற்றும் தளபாடப் பொருட்கள் என்பன நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 1000 நீர் நிலை அளவீடுகளுக்கிடையே 206 நீர் நிலை அளவீடுகள், வரைபட ஸ்கேனர் இயந்திரம்(Plotter), 04 மொனிட்டர் மற்றும் கணனி மென்பொருள் என்பன 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகிந்தலை சுற்றுலா விடுதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட பாதுகாப்பு கெமரா முறைமை மற்றும் தளபாடப் பொருட்கள் 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது தரிசு வயல்காணிகளில் மீண்டும் பயிர் செய்தல், கட்டிட புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 7,468,522 தொகையை பயன்படுத்தி கணனி, தளபாடப் பொருட்கள் மற்றும் உரித்தல்லாத ஏனைய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 281-2-2-12-2506 செலவின விடயத்தின் கீழ் தலைமை அலுவலகத்தின் நிர்வாக செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் 03 மாவட்டங்களின் பற்றுச்சீட்டுக்கள் மீளளிப்பில் சேமிக்கப்பட்ட தொகையில் கணனி, தளபாடப் பொருட்கள் மற்றும் உரித்தல்லாத ஏனைய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சொத்துக்கள் கைப்பற்றுதல் அதற்குரிய செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு முகவர் நிறுவனத்தின் மூலம் இலங்கை அரசாங்க வலையமைப்பு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,048,117 பெறுமதியான தொலைத்தொடர்பு உபகரணங்கள் திணைக்களத்திற்கு | இந்த தொலைத்தொடர்பு உபகரணங்கள் திணைக்களத்தின் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை என அறியத்தருகின்றோம். | உரிய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் பொருட் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டு அவை நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 281-2-2-0-2103 விடய இலக்கத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கைப்பற்றுவதற்கான ரூபா 15,000,000 ஆன மொத்த நிதியேற்பாட்டுத் தொகையும் பயன்படுத்தப்படாதிருந்த துடன் 281-2-2-12-2506 மற்றும் 281-2-2-13-2506 என்ற செலவின விடயங்கள் இரண்டின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதியேற்பாட்டு தொகை முறையே ரூபா 1,000,000,000 மற்றும் ரூபா 558,633,000 ஆக இருந்த போதிலும் அதில் 23 சதவீதம் மற்றும் 55 சதவீதம் சேமிப்பு காணப்பட்டது. | குறித்துரைத்த பிரகாரம் தேவையான துணை பதிவேடுகளின் பிரதிகள் கிடைக்காமையின் காரணமாக குறித்த திகதியில் திறைசேரி வைப்புக் கணக்கிற்கு நிதியேற்பாட்டை மாற்றுவதற்கு முடியாதிருந்தமை மற்றும் 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சகல நிதியேற்பாடுகளையும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 281-2-2-0-1303 என்ற கட்டிட நிர்மாணம் பராமரிப்பு செலவின விடயத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக்கள் மொத்த நிதியேற்பாட்டில் 29 சதவீதம் ஆகும். சேமிப்புக்களுக்கு காரணமாக கொரோனா நிலைமையினால் உத்தியோகத்தர்களின் வருகை | கட்டிட பராமரிப்பு மற்றும் சிறு திருத்தங்களுக்காக ஆகக்குறைந்த செலவினங்கள் ஏற்பட்டுள்ளது. | சேமிப்புக்களுக்கான சரியான காரணங்களை காண்பித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

வரையறுக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலதிக நேரத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் 98 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் தமக்கு உரித்தான கடமை நேரத்திற்கு மேலதிகமாக மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தியமையால் மேற்கூறப்பட்ட காரணத்தை காண்பித்தமை ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 எல்லையினை விஞ்சியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒதுக்கீட்டு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 290,000,000 ஆக இருந்த போதும், திணைக்களத்தால் உள்ளபடியாக ஆண்டில் ரூபா 272,460,566 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒதுக்கீட்டு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த எல்லையை மீறுவதாயின் அந்த எல்லையை திருத்தி கொள்ளல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 94.1 இன் பிரகாரம் ஏனைய முறையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர வருடாந்த மதிப்பீடு நிதியேற்பாடு உள்ளதாயின் மாத்திரம் எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலைகள் அல்லது சேவைகள் அல்லது வழங்கல்களுக்காக எந்தவொரு செலவினமோ அல்லது கடப்பாடுகளோ அல்லது பொறுப்புக்களோ ஏற்படுத்த முடியாதிருந்த போதிலும் | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் ஆண்டில் சரிசெய்ய முடியாதிருந்தமையின் காரணமாக மேலும் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டில் இந்த மீதியை சரிசெய்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | சேமிப்பை விஞ்சி செலவின மொன்றோ அல்லது கடப்பாடுகளோ ஏற்படுத்தப் படாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தால் ஒரு மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 03 மூலதன செலவினங்களின் சேமிப்பினை விஞ்சி ரூபா 20,145,216 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சேதனப் பசளை கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தும் செலவின நிகழ்ச்சித் திட்டம் | | |
| விவசாய இராஜாங்க அமைச்சின் 426-2-03-001-1504 என்ற மானிய பசளைகளை கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தும் செலவின விடயத்தில் 2021 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 1,330,468,500 நிதியேற்பாட்டுத் தொகையில் ரூபா 1,183,531,515 தொகை மாத்திரம் பசளை கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்தும் செலவினத்திற்காக செலவிட்டு பிழையாக மிகுதி நிதியேற்பாட்டில் ரூபா 31,493,999 தொகை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் வாகனங்களை பழுதுபார்த்தல், காப்புறுதி தவணை பணம் செலுத்துதல், எரிபொருள் பட்டியலை மீளளிப்பு செய்தல் மற்றும் சேதனப் பசளை பயன்பாட்டை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு படி செலுத்துதல், விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற நிதியேற்பாடு உரிய பணிகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

(ஆ) ஜீவதுரு உதான நிகழ்ச்சித் திட்டம்

---

விவசாய இராஜாங்க அமைச்சின் 2021 ஏப்ரல் 05 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையில் “ஜீவதுரு உதான” தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்காக விவசாய இராஜாங்க அமைச்சின் மூலம் ரூபா 21,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 418,363 முருங்கை கன்றுகள் 516 கமநல சேவை நிலையங்களுக்காக பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 17,592,246 தொகை மற்றும் தெளிவுபடுத்தும் செலவினங்களுக்காக ரூபா 350,999 தொகை என்பன செலவிடப்பட்டிருந்தன. மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது பகிர்ந்தளிப்பதற்கு காணப்பட்ட கன்றுகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமை, கமநல சேவை நிலையங்களில் கன்றுகள் இறந்தமை, கன்றுகளை பெற்ற நபர்கள் அந்த கன்றுகளை சரியான முறையில் நட்டி பராமரிக்காமை மற்றும் வழங்கப்பட்ட கன்றுகள் தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று இடம்பெறாமை என்பன கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அந்த செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 17,943,245 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் செயல்முன்னேற்றம் மாவட்ட மற்றும் பிரதேச விவசாய குழுக்களின் குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு பின் தொடர் நடவடிக்கைகளை செய்து உரிய செயல்முன்னேற்றம் மீளாய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம்.

கிடைத்த நிதியேற்பாட்டை சரியான மேற்பார்வையுடன் எதிர்பார்த்த நலன்களை பெறும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

(இ) கம சமக பிலிசந்தரக் நிகழ்ச்சித் திட்டம்

| | | |
|---|---|---|
| இலக்கம் 429-02-03-002-2506 என்ற செலவின விடயத்தின் கீழ் கம சமக பிலிசந்தர நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 12 மாவட்டங்களில் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் காணப்பட்ட குளங்களை மறுசீரமைக்கும் 62 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கிராமிய வயல்கள் மற்றும் அதுசார்ந்த குளங்கள் மற்றும் நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 108,126,600 நிதியேற்பாடு கிடைத்திருந்தது. அதில் 37 செயற்திட்டங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அம்பாறை மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 02 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் 16 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் மிகுதி 07 செயற்திட்டங்களும் 51 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான மட்டத்தில் காணப்பட்டது. | நீர்ப்பாசன நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிதியேற்பாடு வழங்கப்பட்டமையால் உரிய செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | கிடைத்த நிதியேற்பாடு ஆண்டின் போது பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | **ரூபா** | | | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | | | |
| 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 51(1) ஆம் பிரிவு | | கமநல அபிவிருத்தி சபைகள் தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | கமநல அபிவிருத்தி சட்டத்திற்குரிய கட்டளைகள் தயாரித்து அந்த கட்டளைகள் மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி சட்ட வரைவு வளங்கலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | கமநல அபிவிருத்தி சபைகள் தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | | நட்டம் அல்லது இழப்பு ஏற்படுமாயின் உடனடியாக பொறுப்பு வாய்ந்த நபர்களை தீர்மானிப்பதற்காக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2014, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட 08 வாகன | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | விபத்துக்கள் தொடர்பாக உரிய அறிக்கை 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 140,470,793 | திணைக்களத்திற் குரிய 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 140,470,793 பெறுமதியான வைப்புக்கள் ஓய்வுபெறச் செய்யப்படாமல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்டது. | திறைசேரியிலிருந் து கட்டுநிதி பெறுவனவு மற்றும் அந்த பணத்தை முகாமைத்துவம் செய்யும் இயலுமையின் பிரகாரம் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றே ாம். | காலாவதியான வைப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்யப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | | திணைக்களத்திற் குச் சொந்தமான நாரஹேன்பிட்டியி ல் இரண்டு களஞ்சியங்களில் உள்ள பொருட்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அது மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன் உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றே ாம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்ப ட வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | | 526 வாகனங்கள் மற்றும் பொருத்தமான உபகரணங்கள் தொடர்பாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டி ருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில் லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்ப ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| (i) 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய பிரஜை /சேவை பெறுநர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் நலன் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) திணைக்கள சுற்றறிக்கை | | | |
| கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 1981 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 30(iii) ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்குரிய கமநல சேவை செயற்குழுவின் 07 நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்குரிய கமநல சேவை செயற்குழுவின் 495 நிதி கூற்றுக்கள் என்பன 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்தபடி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 17 கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களினால் மாவட்டங்களுக்குரிய 396 கமநல சேவை நிலையங்களில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கமநல சேவை செயற்குழு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| கூட்டுமொத்தமாக ரூபா 109,875,327 தொகை மீண்டும் மீளளிப்பு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. சில கமநல சேவை நிலையங்களிலிருந்து 3,520,000 ஆன கணிசமான தொகையொன்று பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் தீர்த்து வைக்கப்படாதுள்ளதுடன் அத்திகதியில் உள்ளவாறு பொறுப்புக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | சுயாதீனமான நிறுவனமாக இருந்தமையால் மாவட்ட அலுவலகங் களினால் பெறப்பட்ட ரூபா 109,875,327 தொகையை மீண்டும் அந்த கமநல சேவை நிலையங்களுக்கு செலுத்துதல் வேண்டும். |

## 2.7 முற்பணம் வழங்குதலும் தீர்த்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,528,452 ஆக இருந்ததுடன் அதில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற மீதி ரூபா 517,284 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மாகாண சபைகளுக்காக இடமாற்றலாகிச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டு விலகிய மற்றும் மரணமடைந்த மற்றும் ஏனைய கடன் மீதிகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 19,222,940 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 9,055,217 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மாகாண சபை கடன் மீதி தாமதமின்றி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த துடன் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் மூலம் பிணையாளர் களிடமிருந்தும், ஓய்வூதியத்தில் இருந்தும் உரிய உத்தியோகத்தர் களின் கடன் மீதியை ஏனைய பொருத்தமான முறைமைகளை பின்பற்றியும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.8 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 மாவட்ட அலுவலகங்களில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ஒப்பந்த நிறுத்தி வைத்தல் ரூபா 13,770,864 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்த்து வைப்பதற்கு முடியாதுள்ள நிறுத்தி வைத்தல்கள் உரிய அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மற்றும் போதியளவான கட்டுநிதி திறைசேரியிலிருந்து கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து தாமதமின்றி நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 11 மாவட்ட அலுவலகங்களின் மூலம் சேர்க்கப்பட்ட ஏக்கர் வரி, இயந்திர வாடகை, காப்புறுதி இழப்பீடு, ஏல விற்பனை வருமானம், கடன் தவணை பெறுவனவுகள் ரூபா 10,218,418 பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் அந்த அலுவலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படாத ரூபா 10,218,418 தொகையான பெறுவனவுகள் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிற்குரிய ஏக்கர் வரி, இயந்திர வாடகை, காப்புறுதி இழப்பீடு, ஏல விற்பனை வருமானம், கடன் தவணை போன்ற பெறுவனவுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். |

## 2.9 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தினதும், 26 மாவட்ட அலுவலகங்களினதும் வங்கி இணக்கக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 11,011,822 பெறுமதியான 385 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,336,303 பெறுமதியான காசோலைகள் ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 7,675,268 இற்குரிய காசோலைகளை ஓய்வுபெறச் செய்வதற்காக அல்லது நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 54,523,455 தொகையான 27 சிறு நீர்ப்பாசன செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 33,444,278 செலவில் அதில் 23 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமைக்கு 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை, பாதகமான காலநிலை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட விலைகளின் எண்ணிக்கை உயர்வடைந்து சென்றமை காரணமாக இருந்ததை அறியத்தருகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயல் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். |
| (ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 200,000,000 ஆன 52 உரக் களஞ்சியங்களை நிர்மாணித்தல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 130,768,929 செலவில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 29 களஞ்சியங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட நிலைமையின் காரணமாக 2020 இன் செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த காலஎல்லையில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது செயலாற்றல் அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு | நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் செயலாற்றல் அறிக்கையை மொழிபெயர்த்தல் மற்றும் பிரதிகளை அச்சிட்டு இந்த ஆண்டில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |

**3.3 வெளிநாட்டு நிதி உதவி செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005-2008 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டு வள திணைக்களத்தினால் சூரிய சக்தியில் செயற்படுகின்ற நீர்ப் பம்பிகள் மற்றும் துளிநீர் தொழில்நுட்பங்களை ஈடுபடுத்துவதற்காக விவசாய அமைச்சிற்கு ரூபா 2,327,272,272 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த முறைமைக்காக சகல பணமும் அறவிட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,264,753,696 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டு வரையில் அறவிடப்பட்ட தொகையில் கிளிநொச்சி, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் என்ற மாவட்ட அலுவலகங்களின் விவசாய வங்கிகளில் ரூபா 1,848,600 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு வரையிலும் வழங்கப்பட்ட முறைமைகளில் 90 சதவீதம் தொலைந்துபோனமை, பயன்படுத்தப்படாமை, விவசாயிகளின் தகவல்களை கண்டறிய முடியாமை மற்றும் செயற்பாடற்று காணப்பட்டமை என்பன அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் | விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் என்பன இணைந்து மிகுதி நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் கமநல சேவை செயற்குழு / கமநல வங்கி (குறித்த செயற்திட்டம்) கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் செயலாளர் விவசாய அமைச்சிற்கு அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் சகல பணமும் விரைவாக அறவிட்டு பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக மண்வெட்டிகள், கொழுக்கிகள், நீர்விசிறும் பாத்திரங்கள் 600 வீதம் 2021 நவம்பர் 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டமையை காண்பித்து ரூபா 1,355,400 தொகை அரச வணிக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்றமை மற்றும் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் விவசாயிகளுக்கிடையே பகிரந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மண்வெட்டிகள், கொழுக்கிகள், நீர் விசிறும் 600 பாத்திரங்கள் வீதம் யட்டியாந்தோட்டை கமநல சேவை நிலையத்திற்கு கொண்டு சென்றதன் பின்னர் விநியோகிக்கும் கட்டளையின் மூலம் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களம் பெற்ற சகல பொருட்களும் களஞ்சியத்திற்கு வழங்க வேண்டியிருந்த துடன் விவசாயிகளுக்கு வழங்கும் போது அதற்காக எழுத்து மூல சான்றுகள் பெறப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சிலிருந்து கிடைத்த நிதியேற்பாடுகளில் ரூபா 1,579,332 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாணந்துறை உணவகத்திற்கு உள்நுழையும் படிக்கட்டுக்கள் நிர்மாணிக்காமையால் நிலையத்தின் செயற்குழு நிதியத்திலிருந்து ரூபா 197,000 செலவில் | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக பாணந்துறை உணவகத்தை திறக்க முடியாதிருந்ததுடன் எதிர்வரும் மாதத்தின் போது இந்த உணவகத்தை திறந்து நடாத்திச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | தாமதமின்றி உணவகம் திறக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் உணவகம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | | |
| (ஆ) | உலக உணவு செயற்திட்டத்திலிருந்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட CR-0098 என்ற ஜீப் வண்டி 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்து பயன்படுத்த முடியுமாக இருந்த போதும் அந்த ஆண்டு முதல் மாலபே மோட்டார் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | CR-0098 என்ற ஜீப் வண்டியை பதிவு செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | 25 கமநல சேவை நிலையங்களில் 04 சக்கர 174 டிறக்டர்கள், 02 சக்கர 43 டிறக்டர்கள், 95 டிறக்டர் டெயிலர்கள், 69 வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள், 256 வட்டு கலப்பைகள் / கொக்கி கலப்பைகள், 293 சேற்று சக்கரங்கள் மற்றும் 796 ஏனைய உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் 06 வருடங்கள் முதல் 24 வருட காலமாக விளைவற்று, பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் உரிய சொத்துக்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை | தற்போது 04 சக்கரங்களில் 49 டிறக்டர்கள், 02 சக்கரங்களில் 12 டிறக்டர்கள், 08 டிறக்டர் டெயிலர்கள், 52 வட்டு கலப்பைகள் / கொக்கி கலப்பைகள், 58 சேற்று சக்கரங்கள், 20 வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள் மற்றும் 91 ஏனையவைகள் என்பன அகற்றுவதற்காக எஞ்சிக் காணப்பட்டதுடன் 58 சேற்று சக்கரங்கள், 20 வேளாண்மை வெட்டும் இயந்திரங்கள் மற்றும் 91 ஏனையவைகள் அகற்றப்பட்டுள்ளது. | சொத்துக்கள் துருப்பிடிப்பதற்கு முன்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 20 மாவட்ட அலுவலகங்கள், 252 கமநல சேவை நிலையங்கள், 03 இயந்திர தளங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் காணி என்பன மதிப்பீடு செய்து நிதியல்லா சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணிகளை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற்குரிய சகல காணிகளும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 447 கமநல சேவை நிலையங்கள், 03 இயந்திரத் தளங்கள், கட்டிடங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் 03 கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிடங்களை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற் குரிய சகல கட்டிடங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | புத்தளம் மாவட்ட அலுவலகத்திற்குரிய ரஜகந்தலுவே உரக் களஞ்சியம் மதிப்பீடு செய்து மீளாய்வாண்டில் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய கட்டிடம் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற் குரிய ரஜகந்தலுவே உரக் களஞ்சிய கட்டிடம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | 2015, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 41 இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள், தலைமை அலுவலகத்தினதும் 05 மாவட்ட அலுவலங்களினதும் கணனி, மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற பொருட்களை அகற்றி அவற்றின் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 இன் பொருள் மெய்மையாய்விற்குரிய ஆற்றப்பட வேண்டிய பொருட்களை அகற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் 14 வாகனங்களின் அகற்றும் நடடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகற்றியதன் பின்னர் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றுவதற்கு தீர்மானித்த உபகரணங்களை ஆண்டின் போது அகற்றி கணக்கு களிலிருந்து நீக்குதல் வேண்டும். |
| (ஏ) | 2017 யூன் 26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் தற்போது கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஐ) | 2019 யூலை 04 ஆந் திகதி இலக்கம் LY-1616 என்ற ஹீனோ வகையின் பிறைம் மூவர் வண்டி மற்றும் இலக்கம் LY-2183 என்ற டெக்டர் டிறெயிலர் என்பன இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும், 2020 யூன் 25 ஆந் திகதி இலக்கம் LJ - 2842 என்ற பவுசர் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கும் விடுவிக்கப்பட்டிருந்தமை இயந்திர அத்தியட்சகரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்ட போதிலும் அவற்றை முறையாக கையளித்து நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப் பட்டுள்ள சொத்துக்களின் உரித்தை சட்டரீதியாக கையளித்து கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 770(4)(ஆ) இன் பிரகாரம் விசேட மெய்மையாய்வு சபையின் பரிந்துரையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் அகற்றப்பட வேண்டிய 02 இயந்திரங்கள், 2018 ஆம் ஆண்டில் அகற்றப்பட வேண்டிய 07 இயந்திரங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் அகற்றப்பட வேண்டிய 26 வாகனங்கள் என்பன 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் அகற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | நகர அபிவிருத்தி அதிகார சபையில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறாமல் திணைக்களத்தால் ரூபா 82,972,483 செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்று மாடிக் கட்டிடத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு முறையான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படாமை, கட்டிடத்தின் மலசல கூட முறைமையை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் அளவிடைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட 74 பணிகள் மேற்கொள்ளாதிருந்தமை போன்ற குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்று குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.6 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்திலும், மாவட்ட அலுவலகங்களிலும் ஏற்பட்ட 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரையான காலத்திலிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,505,752 வாகன விபத்து நட்ட மீதியை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் முன்கொண்டு வரப்பட்ட மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக காணப்படுகின்ற அசாதாரண தாமதங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். ஏற்பட்டுள்ள நட்டம் உடனடியாக அறவிடப்படல் வேண்டும். |

### 3.7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு 2019 இன் கணக்காண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 61 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், | உரிய கணக்காய்வு ஐயவினாக்களுக்கான விளக்கமளித்தல்கள் குறித்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு | குறித்துரைத்த காலஎல்லையில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு |

| | | |
|---|---|---|
| 2020 இன் கணக்காண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 74 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் மற்றும் 2021 இன் கணக்காண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 47 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2022 மே 09 ஆந் திகதி வரையிலும் பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பதிலளிக்கப்படல் வேண்டும். |

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாண இலக்கம் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் 35 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,547,689 தொகையை அறவிடுவதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அசாதாரண தாமதங்கள் அவதானிக்கப் படுகின்றமையால் தாமதங்களின்றி சகல பரிசோதனை களையும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடல் வேண்டும். |
| (ஆ) | விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்காக 2015/2016, 2019/2020, 2020/2021 ஆம் ஆண்டுகளின் போது சோள பயிர்ச்செய்கைக்காக ரூபா 326,990,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 56,560,010 அறவிட வேண்டிக் காணப்பட்டது. | கடனை அறவிடுவதற்காக நடுவர் சபைக்கு விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்து விரைவாக கடன் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது விதை நெல் வழங்குவதற்காக விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து ரூபா 25,000,000 தொகை 06 மாதங்களில் அறவிடும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்து கடன் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 8,314,910 ஆகும். | | |
| (ஈ) | சேதனப் பசளையை மேம்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட ‘‘சாரலங்கா’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் 21 மாவட்ட அலுவலகங்களில் 318 விவசாயிகளுக்காக ரூபா 69,850,000 கடன் தொகை விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அந்த நிதியில் 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் ரூபா 24,916,492 தொகை மேலும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. அலுவலகத்தின் இப்பலோகம கமநல சேவை நிலையத்தில் ரூபா 500,000 கடனை பெற்ற நபர் ஒருவர் 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை எந்தவொரு தவணைப் பணமும் செலுத்தியிருக்கவில்லை. | இந்த நிலுவை கடன் பணத்தை அறவிடுவதற்காக நடுவர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்து கடன் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | 2000/2007 காலப்பகுதியின் போது நெல் கொள்வனவு செய்வதற்காக பொதுத் திறைசேரியால் திணைக்களத்திற்கு நேரடியாக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்ட அலுவலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 12,552,764 ஆகும். | பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்ட அலுவலகங்களினால் பரிசோதனை நடவடிக்கைகளை நடாத்தி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரச கணக்குகள் திணைக்களத்திற் குரிய கடன் பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 3,384 ஆக இருந்ததுடன் 20 பதவி வெற்றிடங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் ஒரு ஊழியராவது சேர்க்கப்பட்டிருக்க வில்லை. | விவசாய இராஜாங்க அமைச்சு வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் ஊழியர்களை சேர்ப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை நியமிக்கப்படாதிருந்த பதவிகளுக்காக ஆட்சேர்த்தலை பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மையால் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது காலரீதியில் ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |